<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 43/2021</u>

<u>வழக்கு சாட்சி PW-4</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஹரிகிருஷ்ணன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் (பணி நிறைவு) |
| கிராமம் | : | மயிலாடி | வயது | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். 01.10.2019ம் தேதி, நான் ஆலங்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல் ஆய்வாளர் ஐயப்பன் மேல் விசாரணை செய்த வழக்கு கோப்பினை நான் எனது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் விசாரணையை மேற்கொண்டேன். சாட்சிகளை விசாரித்தபோது, ஏற்கனவே ஐயப்பன் ஆய்வாளரிடம் கூறியது போல் கூறியதால் நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

01.10.2019ம் தேதி, வழக்கு சொத்துக்களை **பகுப்பாய்வு** செய்ய வேண்டி கனம் ஆலங்குளம் நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் பெற்று 20.11.2019ம் தேதி திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் ஜேம்ஸ்அந்தோணிராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்து தடயஅறிவியல் ஆய்வக அறிக்கை பெற்றேன். அந்த ஆய்வக அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். 18.12.2019ம் தேதி, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவர் செல்வமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சம்பவயிடம் பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் இடம் என்றால் சரிதான். பஸ்ஸ்டாண்டில் நின்ற நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அத்தாட்சி சம்பவயிடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அத்தாட்சி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு முழுமையாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கை ஒருதலைபட்சமாக மேல்விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு புள்ளிவிபரக்கணக்கிற்காக எதிரி மீது பிழையான இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.01 18:39:08 +0530